கோப்பல் தமிழ்க் கல்வி மையம்
வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

துளிர் – 5
இதழ் – 1

நவம்பர்-2019

ஸ்ரீவிகாரி ஆண்டு
ஐப்பசி மாதம்

# துளிர்

## ஜப்பானிய நாடோடிக் கதை

*ஜப்பானில் ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தில் இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். அண்ணனுக்கு திருமணமாகி விட்டது. ஒரு நாள் அவன் தம்பியிடம் சென்று,"தம்பி எனக்கு என் குடும்பத்தை பார்க்கவே வருமானம் சரியாக உள்ளது. நீ எங்காவது வெளியூர் போய் பிழைத்துக் கொள் " என்று கூறினான்.*

*அண்ணனிடம் விடைபெற்றுக் கொண்ட தம்பி ,வெளியூர் செல்லாமல் , அவ்வூரிலேயே ஒரு ஏழைப் பெண்ணை திருமணம் செய்து கொண்டு வயலில் கூலி வேலை செய்து பிழைத்து வந்தான். மழைக்காலம் வந்தது. வேலை நின்று போனது. வருமானம் இல்லாததால் குடும்பம் நடத்தவே கஷ்டப்பட்டான்.*

*பட்டினியால் வாடும் நிலை வந்தது. அண்ணனிடம் சென்று உதவி கேட்டான். உதவி செய்ய விருப்பம் இல்லாத அண்ணன் அவனை கோபமாக பேசி விரட்டி விட்டான். மனம் உடைந்து போன தம்பி கால் போன போக்கில் நடந்தான். அப்படியே நடந்து ஒரு காட்டின் மத்தியப் பகுதிக்கு வந்து சேர்ந்தான்.*

*அங்கே ஒரு மரத்தடியில் கிழவன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் தன் கதையை சொல்லி அழுதான் தம்பி. அவனை பார்த்து இரக்கப்பட்ட கிழவன் ,ஒரு கோதுமை ரொட்டியை அவனிடம் கொடுத்து, இதை எடுத்துக் கொண்டு காட்டுத் தெய்வத்தின் கோயிலுக்குப் போ. அதன் பின்புறமிருக்கும் குகையில் குள்ளர்கள் வாழ்கிறார்கள். அவர்களிடம் இந்த ரொட்டியைக் கொடுத்தால் ,அவர்கள் உன்னிடம்," என்ன வேண்டும்?" என்று கேட்பார்கள். நீ மாவறைக்கும் கல் யந்திரம் வேண்டும் என்று கேள் "என்று சொல்லி அனுப்பினார்.*

*தம்பியும் அது போலவே செய்து குள்ளர்களிடமிருந்து கல் யந்திரத்தை பெற்றுக் கொண்டான். திருப்பும் வழியில் என்ன நடந்தது? அடுத்த மாத இதழில் பார்ப்போம்..*

*-விஷ்வசாந்தி*

## கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு உதவ ஒரு எளிய வாய்ப்பு

1. **நீங்கள் அமேசானில் வாங்க விரும்பும் அதே பொருளை , அதே விலையில் [https://smile.amazon.com](https://smile.amazon.com)இணையதளம் மூலம் பெறுங்கள்.**

2. **நீங்கள் செலவு செய்த தொகையில் ஒரு சிறு பகுதி , அமேசான் (Amazon) நிறுவனத்தால் கோப்பல் தமிழ்க் கல்வி மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும்.**

3. **"DFW tamil foundation" என்று *smile.amazon.com* இணையதளத்தில் தேடுங்கள். செந்தமிழ் பணிக்கான உங்கள் ஆதரவைத் தொடங்குங்கள்.**

amazon.com Smile
You shop. Amazon gives.

## நிகழ்வறிவோம்- விளையாட்டு தின நாள்



*நமது கோப்பல் தமிழ்ப் பள்ளியின் விளையாட்டு தின விழா அக்டோபர் 12 ஆம் தேதி அன்று பிளானோவில் உள்ள ஒரு பூங்காவில் நடைபெற்றது.. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் இந்தியாவிலிருந்து வந்திருந்த உறவினர்கள் பலரும் இவ்விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். மாணவர்களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டன. போட்டிகளின் முடிவில் அனைவருக்கும் அருமையான உணவும் பரிமாறப்பட்டது.*









WE'LL DO THE HONORS
AERO NY






I'M
READY








TASTE
BUDS



*நிலை 7 மாணவி சிவரஞ்சனியின் தீபாவளி பற்றிய கட்டுரை.*

## தீபாவளி

சிவரஞ்சனி


எனக்கு மிகவும் பிடித்த பண்டிகை தீபாவளி. ஒவ்வொரு வருடமும் குடும்பங்கள் சந்திச்சு விளக்குகளை ஒளி ஏற்றி இந்த பண்டிகை-ய கொண்டாடுவார்கள். தீபாவளி பொழுது இந்தியாவில் எல்லொரும் சீக்கிரமா எழுந்திருப்பார்கள். குளிக்கும் பொழுது எண்ணையில் ஊறி குளிப்பார்கள். தீபாவளியப்ப புதிய ஆடைகளை அணிந்து பூஜைக்கு செல்வார்கள். இந்த பண்டிகைக்கு பல திண்பண்டங்களும் இனிப்புகளும் செய்வார்கள். முறுக்கு, வடை, ஓள பக்கோடா சில உதாரணங்கள். காஜீ கட்லி, மைசூர்பாக், குலொப் ஜாம் சில இனிப்பு உதாரணங்கள்.

மாலை பொழுது பட்டாசு வெடிப்பார்கள். சிறிய குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கும் பட்டாசு வெடிக்கப் பிடிக்கும். தீபாவளியிலே பட்டாசு வெடிக்கிறது தான் எனக்கு மிகவும் பிடிக்கும். பட்டாசு வெடிச்சி பின் குடும்பங்கள் அவரகளோட நண்பர்ளுடைய மற்றும் உறவினர்களுடைய வீட்டுக்கு செல்வார்கள். அங்கே திண்பண்டங்களையும் இனிப்புகளையும் அவர்களுடன் கொடுத்து தீபாவளிக்கு வாழ்த்து சொல்லி மகிழ்வார்கள். இந்த பண்டிகையில எல்லொரும் சேர்ந்து கொண்டாடுவார்கள். இதுவும் ஒரு காரணம் ஏன் தீபாவளி என்னுடைய மகவும் பிடித்த பண்டிகை.

சின்னத் தூரிகை:

நமது கோப்பல் தமிழ் பள்ளி நிலை 3 மாணவர்கள் தங்கள் பிஞ்சு விரல்களைக் கொண்டு வரைந்த அழகான ஓவியங்கள் உங்கள் பார்வைக்காக..









## 'தில்' இருந்தா சொல்லுங்க

*நிலை 5 முதல் நிலை 8 வரை உள்ள மாணவர்களுக்கான புதிர் போட்டி:*

*1 = வியட்நாம், 2 = பனாமா, 3 = புருண்டி, 4 = நியூசிலாந்து, 5 = சீன குடியரசு*

*ஆறாவது நாடு என்னவாக இருக்கும்?*

*நிலை 1 மற்றும் நிலை 2*

*மறைந்திருக்கும் எண்களைக் கண்டுபிடிக்கவும்*




*நிலை 3 மற்றும் நிலை 4 மாணவர்களுக்கான புதிர் போட்டி:*

*1. தொ வு உ ல் ழி த் ழ*

*2. ள் க ழ ழி மொ ப*

*3. னை பா ன் யா ப் க*



*To submit your answer copy and paste the link or click :* https://goo.gl/forms/V3auuWs036nJ626u2

## குறள் சொல்லும் பொருள்

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தகைத்து.

சொற்பதம்:

பணிதல் - அடக்கமாக நடப்பது
எல்லார்க்கும் நன்றாம் - எல்லோர்க்கும் நன்று
அவருள்ளும் - அவர்களுள்
செல்வர்க்கே - பணக்காரர்களுக்கே
பணக்காரர்களுக்கே - இன்னொரு செல்வம் போன்றது

ஒருவர் தாம் பெற்ற உயர்ந்த கல்வி , குணம் அல்லது பணத்தின் மீது கர்வம் கொண்டு பெருமிதம் அடைவர். பணிந்து நடப்பது இவற்றில் உயர்ந்த நிலையில் இருக்கும் அனைவருக்கும் நல்லது. ஏன் பணக்காரர்கள் பணிந்து நடப்பது மிகவும் சிறப்பு ?கல்வியினால் பெருமிதம் கொள்பவர், அந்த கல்வியினால் பெற்ற அறிவால் அடக்கமாக நடந்து கொள்வர். நல்ல குணம் கொண்டவர், இயல்பிலேயே அடக்கமாக இருப்பர். செல்வந்தர்களுக்கு இது போன்ற இயல்பான வழிகாட்டுதல் இல்லை. இருந்தும் அவர்கள் பணிவின் சிறப்பை உணர்ந்து பணிவாக நடந்து கொண்டால் அது அவர்களுக்கு மேலும் சிறப்பை தரும். வாழ்பவரின் வாழ்வே சிறப்பானது.

*அருண்*

## நூல் அறிவோம் – மரப்பாச்சி சொன்ன ரகசியம்

செம்மரக்கட்டையால் செய்யப்பட்ட மரப்பாச்சிப் பொம்மை ஒன்று, ஷாலினி எனும் சிறுமிக்குக் கிடைக்கிறது. அப்பொம்மை திடீரெனப் பேசத் தொடங்குகிறது. ஷாலினிக்குக் கிடைக்கும் சுவாரசியமான அனுபவங்கள் தான் இந்நூல். திரு. பாலபாரதி அவர்கள், இந்த புத்தகத்தை எழுதியுள்ளார்

இந்நூல் மிகமிக முக்கியமான சமூக விஷயமொன்றைத் தொடுகிறது. பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பாற்ற தொடுதல் *(Good touch, Bad touch)* பற்றி மிக எளிமையானதொரு புரிதலை ஒரு கதையின் மூலம் உருவாக்குகிறது. நல்ல, கெட்ட என்ற சொல்லுக்கு மாற்றாக பாதுகாப்பான, பாதுகாப்பாற்ற எனும் சொற்களைப் பாலபாரதி பயன்படுத்தியுள்ளது சிறப்பாய் உள்ளது. தனக்கு நேருவதைப் பெற்றோர்களிடம் சொல்லவே பூஜா தயங்கும் பொழுது, மரப்பாச்சிப் பொம்மை அவளுக்கு உதவுகிறது. உதவுவதோடு அல்லாமல், மரப்பாச்சியான செஞ்சந்தன இளவரசி பூஜாவிற்காகச் செய்யும் சாகசம் அட்டகாசமாய் உள்ளது.

இளவரசியின் சாகசம் அதோடு முடிவதில்லை. பள்ளியில், ஷாலினி கையில் இருந்து மரப்பாச்சியைப் பிடுங்கிக் கொண்டு ஓடும் சேட்டைக்கார நேத்ராவையும் மரப்பாச்சி படாதபாடு படுத்துகிறது. நீங்கள் கையில் வைத்திருக்கும் பொம்மை, உங்களை உண்மையை மட்டும் பேச வைத்தால் என்னாகும்? நேத்ராவிடம் கேளுங்கள்.

இந்த வருடத்தின் சிறந்த சிறார் இலக்கியத்திற்கான விகடன் விருதை வென்றிருக்கும் இது ,அவசியம் படிக்க வேண்டிய ஒரு புத்தகம்.

நன்றி : ஆனந்த விகடன் *- விஷ்வசாந்தி*

## பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்



## தோழா தோழி

என்ன தோழி இன்று மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறாய் என்ன விஷயம் ?

ஆம் தோழா இன்று நாங்கள் பிட்சா சாப்பிட போகிறோம் ..எனக்கு மிகவும் பிடித்த உணவு..

என்ன தோழி நீ இந்த வகை உணவுகளைப் பற்றி இன்னமும் அறியாமல் இருப்பது எனக்கு ஆச்சர்யமாக உள்ளது .

நீ என்ன சொல்கிறாய் தோழா எனக்குப் புரியவில்லையே?

தோழி இது போன்ற உணவுகளில் மைதா மற்றும் தீங்கு விளைவிக்கும் சில ரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. இவைகள் பல நோய்களை உருவாக்கும்.

என்ன பிட்சாவில் இவ்வளவு கெடுதல் உள்ளதா ?

ஆம் தோழி, இது மட்டுமல்ல நூடுல்ஸ் மற்றும் செயற்கை நிறம் சேர்க்கப்பட்ட பொருட்களைக் காட்டி நமக்கு ஆசையைத் தூண்டுகின்றனர். இவையெல்லாம் நல்லதே அல்ல .

அப்படியா ?பின்பு எதைத் தான் சாப்பிடுவது ?


நமது இந்திய உணவு முறையில் உடலைப் பாதுகாக்கும் ஆரோக்கியமான அதே சமயம் சுவையான உணவுகள் பல இருக்கின்றன. பணியாரம், ஆப்பம், பூரி, பொங்கல், வடை என்று ஏராளமான வகைகள் இருக்கும் போது நாம் ஏன் ஆரோக்கியமற்ற உணவுகளைத் தேடிச் செல்ல வேண்டும் நமது இட்லி தான் உலகிலேயே சிறந்த உணவு என்று ஒரு ஆய்வு சொல்கிறது.

அருமையான தகவல் சொன்னாய் தோழா ..நன்றி

*- விஷ்வசாந்தி*

## எண்களை வரிசையில் இணைக்கவும்

மழலை மாணவர்களுக்கான புதிர் போட்டி:



## விடுகதை

*1 .நிலத்தில் முளைக்காத செடி , நிமிர்ந்து நிற்காத செடி ..அது என்ன ?*

*2 .கூரை வீட்டை பிரித்தால் ஓட்டு வீடு.. ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம் ! அது என்ன ?*

விடை அடுத்த இதழில்...

*- விஷ்வசாந்தி*

## கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**பெற்றோர்களும் மாணவர்களும் தங்கள் படைப்புக்களை அனுப்பித் துளிரில் பங்களிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை newsletter@coppelltamil.com என்கிற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். இதழில் வரும் கட்டுரைகளின் படைப்பாளிகள் ஆண்டு விழாவில் கௌரவிக்கப் படுவார்கள்.**

## கோப்பல் தமிழ்க் கல்வி மையம்

**இடம்: *IXL Academy, 773 S MacArthur Blvd, #225 Coppell TX 75019;***
**கல்வி நாள்: ஞாயிற்றுக்கிழமை; நேரம்: *5:00—7:00PM***
***www.coppelltamil.com email: connect@coppelltamil.com***

*https://www.facebook.com/CoppellTamil/?view_public_for=1019360444741468* *http://coppelltamil.com/calendar.htm*